# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ் மொழித் திறன் போட்டி – 2023

### வாசிப்பு – அதிமேற் பிரிவு– 7ஆம் 8ஆம் வகுப்பு

## குடும்ப அமைப்பு

பெற்றோரும், பிள்ளைகளும் அடங்கிய அமைப்பே குடும்பம் ஆகும். இதைத் தனிக் குடும்பம் என்பர். சில குடும்பங்களில் பிள்ளைகளோடு வேறு உறவினரும் கூடி வாழ்கின்றனர். இதைக் கூட்டுக் குடும்பம் என்பர்.

கனடாவில் பலவகையான குடும்ப அமைப்புகள் காணப்படுகின்றன. தாய், தந்தை, பிள்ளைகள் கொண்ட குடும்பம் ஒருவகை. தந்தை, தாய் பிள்ளைகளோடு பாட்டன், பாட்டி கொண்ட குடும்பம் இன்னொருவகை. தனித்தாய் அல்லது தந்தையோடு பிள்ளைகள் சேர்ந்து வாழும் குடும்பங்களும் உள்ளன. திருமணப் பதிவு செய்யாது சேர்ந்து வாழும் குடும்பங்களும் காணப்படுகின்றன.

குடும்ப அமைப்புகள் வேறாக இருந்தாலும் குடும்ப உறுப்பினர் யாவரும் ஒற்றுமையாக வாழவேண்டும். குடும்பத்தை நல்வழியில் நடத்த வேண்டிய பெரும் பொறுப்பு பெற்றோருக்கு உண்டு. பெற்றோருக்கு உறுதுணையாக பிள்ளைகளும், உறவினரும் செயற்படல் வேண்டும். தம் பிள்ளைகளுக்கு வேண்டிய உணவு, உடை, உறைவிடம், கல்வி, ஆகிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோர்களின் கடமையாகும்.

குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பொதுத் தொண்டுகளில் ஈடுபடவேண்டும். பிள்ளைகளுக்கு சிறு பருவத்தில் இருந்தே இவற்றில் ஈடுபடப் பழக்குதல் நன்று. இதனால் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த சமூகத் தொண்டராக, சான்றோராக, நாட்டுப் பற்றாளராகத் திகழ்வார்கள்.